# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

05.02.2024

## 06. அவரது மரணம் கற்றுத்தந்த நறுமண வாழ்க்கை!

ஆண்டவர் இயேசு "ஒருவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்து" அவரைப் பின்பற்ற அழைத்த அழைப்பை, அப்படியே ஏற்று நடப்பவர்கள் பாக்கியவான்கள்! (லூக்கா 9:23). ஏனெனில், நம் ஒவ்வொருவரிடத்திலும் "வெறுக்க உகந்த 'தன்னைத்தான்' என்ற சுயம்" உள்ளது! அந்த சுயத்தை புறக்கணித்து வாழ்வதே ஒப்பற்ற சிலுவையின் ஜீவியம்! உதாரணமாய் 'கோபம்' என்ற சுயம், நமக்குள் வரும் போது, அந்த வீட்டில் நறுமணம் வீசுமோ? அது நாற்றமல்லவா! அது சிலுவையில் புறக்கணிக்கப்படுவதே நலம்! மெய்யாகவே 'கோபம், ஆத்திரம், குற்றஞ் சாட்டுதல்' ஆகிய 'தான்' (Self) வெளிப்படும்போது, 'நாற்றமே' வீசுகிறது! அவர் மாத்திரம் 'சிலுவை மரணத்தை' எனக்கு கற்றுக்கொடுக்காவிட்டால், நாள்தோறும் என்னிலும், நான் போகுமிடமெங்கும் நாற்றமே வீசிடும்! 'குரு கற்றுத்தந்த சிலுவையில் 'நான்' மரிப்பதால், நாற்றம் போய்விடும் என்பது மாத்திரமல்ல..... அங்கு 'நளதத்தின் நறுமணம் வீசுமென்றும், அதுவே நற்கந்த மான சுவிசேஷ நற்செய்தி' எனவும் இயேசு அறிவித்தார்! (மாற்கு 14:8,9).

– ரத்னம்